2026 ஆகஸ்ட் மாதம் 05– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 107/2025

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 (LW2) – செல்லப்பாண்டி |
| தகப்பனார் பெயர்: | வேலு |
| ஊர்: | க.புதுப்பட்டி |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 35 |

05.08.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், க.புதுப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 எனது நண்பர் பிரசாத்தின் மனைவியாவார். 23.01.2025 ம் தேதி காலை 8.10 மணிக்கு பிரசாத் எனக்கு போனில் அழைப்புவிடுத்து, பிரச்சனை என்று கூறினார். தான் தள்ளி வந்துவிட்டதாகவும் கூறினார். நான் எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு அனுமந்தன்பட்டி, பேருந்து நிறுத்தம் அருகில் வந்து

பிரசாத்திற்கு போன் செய்தேன். அப்போது ஒரு காவலர் போனை எடுத்து பேசினார். காவல்நிலையம் வாங்க என்று சொல்லிவிட்டு, அங்கு வைத்து பேசிக்கொள்ளலாம் என்று கூறினார்.

2. நான் எனது இருசக்கர வாகனத்தில் காவல்நிலையம் செல்வதற்காக சென்றுகொண்டிருந்தபோது, உத்தமபாளையம் நீதிமன்றம் அருகே உள்ள ஜே.ஜே.லாட்ஜில் கூட்டமாக இருந்தது. என்னவென்று விசாரித்தபோது, எனது நண்பர் பிரசாத் ஜே.ஜே.லாட்ஜின் உள்ளே இறந்து கிடப்பதாக சொன்னார்கள். அ.சா.1 பிரியாவிற்கு நான் தகவல் சொன்னேன். அ.சா.1 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். 1வது எதிரி அனீஷ் ரஹ்மானின் மனைவிக்கும், பிரசாத்திற்கும் பழக்கம் என்று எனது நண்பர் சொன்னார். நான் அவனிடம் தேவையில்லாத வேலை வேண்டாம் என்று சொன்னேன். அதனால் அவர்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது. உத்தமபாளையம், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

3. இறந்துபோன பிரசாத்திற்கும், 1வது எதிரியின் மனைவிக்கும் பழக்கம் இருந்தது என்றும், நான் பிரச்சனை வேண்டாம் என்று பிரசாத்திடம் சொன்னேன் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. உண்மையில் அவர்களுக்குள் பழக்கம் இருந்ததா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் பிரசாத்திற்கு போன் செய்தபோது, போலீசார் போனை எடுத்து பேசி, தகவல் சொன்னதின் அடிப்படையில் அ.சா.1–க்கு தகவல் சொன்னேன் என்றால் சரிதான். பிரசாத் எவ்வாறு இறந்தார் என்ற விபரம் போலீசார் சொல்லி தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். போலீசார் சொல்லி

தெரிய வந்த விபரத்தை உத்தமபாளையம், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலமாக சொன்னேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 05.08.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.05 18:27:12 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
05.08.2026